## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**முன்பள்ளிக்கல்வி டிப்ளோமா கற்கைநெறி - 2024/2025**
**(அணி –I)**

மேற்படி கற்கைநெறிக்குரிய தெரிவுப்பரீட்சையின் பெறுபேறுகளின்படி நேர்முகத்தேர்விற்கு தெரிவான பரீட்சார்த்திகளின் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**தெரிவான பரீட்சார்த்திகளுக்கான நேர்முகத்தேர்வு:**
எதிர்வரும் 30/08/2024 மற்றும் 31/08/2024 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் காலை 9.30 க்கு ஆரம்பமாகி இணைக்கப்பட்டுள்ள நேரஅட்டவணைப்படி நேர்முகத்தேர்வு நடைபெறும். குறித்த பரீட்சார்த்திகள் நேர்முகத்தேர்வின்போது பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**நேர்முகத்தேர்வின்போது சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்:**
1. தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டு/ செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
2. க.பொ.த. (சா/த) சான்றிதழ்
3. க.பொ.த. (உ/த) சான்றிதழ் (இருப்பின்)
4. வேறு கல்வி மற்றும் தொழில் தகைமைச் சான்றிதழ்கள் (உ-ம்: முன்பள்ளிக்கல்வி டிப்ளோமா)
5. தங்கள் முன்பள்ளி அமைந்துள்ள வலயக்கல்வி அலுவலகத்தின் வலயக்கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தங்கள் முன்பள்ளிக்கற்பித்தல் அனுபவத்தை (முன்பள்ளியின் பெயர் விபரம் மற்றும் காலம்: அண்ணளவாக வருடங்களில்) உறுதிப்படுத்தும் ஆவணம்
6. முன்பள்ளிக்கல்வி கற்றல் கற்பித்தல் தொடர்பில் தங்கள் சாதனைகள் (பிரதேச சபை/நகர சபை/ மாநகர சபை/ பிரதேச செயலர் பிரிவு/ மாவட்ட மட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளில் பெற்றுக்கொண்ட அடைவுகள்)
7. தாங்கள் பல்கலைக்கழகம் தவிர்ந்த வேறு நிறுவனங்களில் முன்பள்ளிக்கல்வி தொடர்பில் டிப்ளோமா தகைமை ஏதாவது பெற்றிருப்பின் அத்தகைமை NVQ மட்டம் 4 இற்கு சமனானது என்பதை உறுதிப்படுத்தும் ஆவணம்.

**மேற்குறித்த ஆவணங்களின் மூலப்பிரதி மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நகல்ப்பிரதி என்பவை நேர்முகத்தேர்வின் போது சமர்பிக்கப்படவேண்டும்.**

குறிப்பு:

நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்பட்ட பரீட்சார்த்திகள் அனைவரும் கற்கைநெறிக்குத் தெரிவானவர்களாக கருதப்படமாட்டார்கள் என்பதனை அறியத்தருவதோடு குறித்த பரீட்சார்த்திகள் நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வது கற்கைநெறிக்குத் தெரிவுசெய்யப்படுவதற்கு கட்டாயமானதாகும். நேர்முகத்தேர்வில் கலந்துகொள்ளும் போது மேற்கூறிய அனைத்து ஆவணங்களையும் சரியாகக் கொண்டுவர வேண்டும். நேர்முகத்தேர்விற்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் எந்தவொரு ஆவணமும் தங்கள் தகைமைகளை உறுதி செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட மாட்டாது.

உதவிப்பதிவாளர்
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
20/08/2024

Mrs.Kohini Sapatithan
Assistant Registrar
Centre for open and Distance Learning
University of Jaffna